மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதற்கு இது நேரம் அல்ல. முன்பே கேட்டிருக்க வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கடைசி நாளாக இருப்பதால் உறுப்பினர்கள் ரொம்பவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்.

(2) சட்ட முன்வடிவுப் பிரதிகள் உறுப்பினர்களுக்கு முன் கூட்டியே அளித்தல்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, இன்று பல சட்டமுன்வடிவுகளைப் பற்றிப் பேசவிருக்கிறோம். இந்தச் சட்டமுன்வடிவுகளினுடைய நகல்கள் முன்கூட்டியே அனுப்பப்படுவது வழக்கம். பல சட்ட முன்வடிவுகளின் நகல்கள் உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்பப்படவில்லை. அந்தச் சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லக் கூடும் என்பது தெரியும். நிறைவேற்றுவதற்கு முன்பே, Bill introduced in the Legislative Assembly of the State என்று முதலில் வரும். பிறகு As passed by the Legislative Assembly என்று இரண்டாவது காப்பி வரும். Bill introduced in the Assembly என்ற காப்பி எங்களுக்கு வரவேயில்லை. இந்த சபையிலே As passed by the Assembly என்ற காப்பிதான் வந்திருக்கிறது. இங்கே படித்துவிட்டு எப்படிப் பேசுவது? இனிமேலாவது இப்படிப்பட்ட குறைகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்களின் நகல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்று காலையில் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சில மசோதாக்களின் நகல்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப் போல, அவகாசம் இல்லாததன் காரணமாக, அனுப்பப்படவில்லை என்று கருதுகிறேன். மற்றவைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. உங்களுக்குக் கிடைப்பதிலே தவறியிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: பில் எண். 39, 40 வரவில்லை. இனிமேலாவது இந்தக் குறைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு உள்ள குறை எனக்கும் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எல்லாவற்றுக்கும் சேர்த்துத் தான் முதலிலே சொன்னேன். தயவுசெய்து நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அவர்களுக்குக் கிடைத்த வாக்குறுதி எனக்கும் கிடைக்குமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லோருக்கும்தான்.

8. உறுதி மொழிக் குழுவின் அறிக்கை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கையை இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

9. அலுவல் வரிசையில் மாறுதல்.

மாண்புமிகு திரு. கே. இராசாமுகமது : தலைவர் அவர்களே, " சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள ஐந்தாவது இனமாகிய 'ஆளுநர் உரையின் மீது விவாதம்' என்பதை, அரசின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளுவதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள ஐந்தாவது இனமாகிய 'ஆளுநர் உரையின் மீது விவாதம்' என்பதை அரசின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளுவதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

10. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே எனது கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு முன், அவைத் தலைவராகிய தங்களுக்கு எங்களுடைய மனக் குறைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது ஜனநாயக அமைப்பு முறையிலே இந்த இரு மன்றங்களும் தங்களுடைய நடவடிக்கைகளை நடத்துவதிலே இதுவரையில் பேணிக் காப்பாற்றி வந்த மரபுகள் காக்கப்பட வேண்டும் என்பது இந்த அவையிலுள்ள எல்லோருடைய கருத்து. அது காப்பாற்றப்படவில்லை என்பது என்னுடைய குறை. காரணம் 8ஆம் தேதி ஆளுநருடைய உரையின் மீதான விவாதம் முடிந்து மற்ற நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் இருக்க